நாள் 01.06.2007

சென்னை குடிநீர் வாரியம்
1, நீரேற்று நிலைய சாலை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002.

# சென்னை நகரில் குடிநீர் வழங்கல் மேலாண்மை

1) சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மேற்பரப்பு நீர் ஆதாரம் மற்றும் நிலத்தடி நீர் ஆதாரம் ஆகியவற்றின் மூலம் சென்னை நகருக்கு குடிநீர் வழங்கி வருகின்றது. பூண்டி, சோழவரம், புழல் ஏரிகள், வீராணம் ஏரி மற்றும் தெலுங்கு கங்கைத் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறும் கிருஷ்ணா நீர் ஆகியவைகள் மேற்பரப்பு நீர் ஆதாரங்களாகும். பூண்டி, ஆற்றுப்படுகை, கன்னிகைப்பேர், பஞ்செட்டி மற்றும் மீஞ்சூர் ஆகிய இடங்களிலுள்ள கிணற்றுத்தளங்கள் நிலத்தடி நீர் ஆதாரங்களாகும். போரூர், இரட்டை ஏரி, தெற்குக் கடலோர நீர்த்தாங்கி மற்றும் நொச்சிக்குப்பம், வேளச்சேரி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள எதிர் சவ்வூடு பரவல் நிலையங்கள் ஆகியவைகள் மற்ற சிறிய நீர் ஆதாரங்களாகும். சென்னை நகருக்குக் குடிநீர் வழங்குவதற்கு முன்னர், ஏரிகளிலுள்ள மேற்பரப்பு நீர், இந்திய தர சான்றிதழ் 10500 ல் குறிப்பிட்டுள்ளபடி புழல், கீழ்ப்பாக்கம், வடக்குத்து மற்றும் செம்பரம்பாக்கம் (சோதனை இயக்கம்) ஆகிய இடங்களிலுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரித்த பின்னர் வழங்கப்படுகிறது. நிலத்தடி நீர் நீரேற்றம் செய்யப்பட்டு, நச்சுக்கொல்லி (குளோரின்) செலுத்தி, விநியோகம் செய்யப்படுகின்றது. சென்னைக் குடிநீர் வாரியத்தின் தற்போதைய செயல்படுத்தப்படும் பகுதியானது சென்னை நகரும் மற்றும் அருகாமையிலுள்ள நகரகப்பகுதியான அம்பத்தூர் நகராட்சியைச் சேர்ந்த முகப்பேர் மற்றும் மணலி புதுநகரைக் கொண்ட மொத்த மக்கள்தொகையான 54 லட்சங்களை கொண்டது.

2) சென்னை நகரம் மற்றும் அதைச் சுற்றியுளள 15,640 தெருக்களிலுள்ள சுமார் 54 லட்சம் மக்களின் குடிநீர்த்தேவையை பூர்த்தி செய்வதற்கு, குழாய் மூலம் தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீர், நகரிலுள்ள 16 பிரதான குடிநீர் விநியோக நிலையங்களிலும் மற்றும் 12 சிறிய குடிநீர் விநியோக நிலையங்களிலும் பெறப்பட்டு, குடிநீர் விநியோகக் குழாய்கள் மூலம் நுகர்வோர்களுக்கு நிநியோகிக்கப்பட்டு வருகின்றது. குடிநீர் விநியோகக் குழாய்களின் மொத்த நீளம் சுமார் 2650 கிலோ மீட்டர் ஆகும். மேலும் ஆலந்தூர், பம்மல், அனகாபுத்தூர், மீனம்பாக்கம், பொழிச்சலூர், கௌல்பஜார், இராமாபுரம், புழுதிவாக்கம், போரூர், வளசரவாக்கம், மதுரவாயல், அம்பத்தூர், ஆவடி, மாதவரம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய அருகாமையிலுள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மொத்தமாக வழங்கப்பட்டு பின்னர் அந்தந்த ஊராட்சி அமைப்புகளால் நுகர்வோர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

3) தற்பொழுது நாளொன்றுக்கு வழங்கப்படும் சுமார் 640 முதல் 645 மில்லியன் லிட்டர் குடிநீரில், நகரத்திற்கு 575 மில்லியன் லிட்டரும், அருகாமையிலுள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 30 மில்லியன் லிட்டரும் மற்றும் தொழில் நுகர்வோர்களுக்கு சுமார் 35 முதல் 40 மில்லியன் லிட்டரும் வழங்கப்பட்டு வருகின்றது. சென்னை நகரில், மேற்கு மாம்பலம், வடபழனி, கோடம்பாக்கம், சூளைமேடு, மேற்கு வேளச்சேரி ஆகிய இடங்களுக்கு பிற்பகல் 2 மணியிலிருந்து 8 மணி வரையிலும் நகரின் மற்ற பகுதிகளுக்கு காலை 3 மணி முதல் 9 மணி வரை சுமார் 4 முதல் 6 மணி நேரம் வரை குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. குழாய்களில் போதுமான அளவு நீர் அழுத்தம் பெறுவதற்கு , குறிப்பிட்ட குடிநீர் விநியோக நிலையங்களிலிருந்து நீர் எடுத்து, காலியான குடிநீர் விநியோகக் குழாய்களில் விநியோக நேரத்திற்கு முன்னதாகவே நீர் நிரப்பப்படுகின்றது. தற்பொழுது வழங்கப்படும் குடிநீரின் அளவு நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு சராசரியாக 106 லிட்டர் ஆகும்.

4) நகரில் சமமான அளவில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு சிறந்த முறையில் நடவடிக்கை மேற்கொண்ட பின்னரும், சில தெருக்களில் குறைந்த நேர அளவிலோ அல்லது நீர் பெறமுடியாத நிலையும் ஏற்படுகின்றது. இந்தத் தெருக்களுக்கு, லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகின்றது. குடிசைப்பகுதிகளில், பொதுக்குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகின்றது. கூடுதலாகக் குடிநீர் தேவைப்படும் இடங்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகின்றது. இந்தப் பகுதிகளில், 9000 லிட்டர் கொள்ளளவுடைய சுமார் 900 லாரி நடைகள் மூலம் மற்றும் 6000 லிட்டர் கொள்ளளவுடைய சுமார் 450 லாரி நடைகள் மூலமும் குடிநீர் வழங்கப்படுகின்றது. ஜுன் 2006ல் நகரில் மொத்தமுள்ள 15640 தெருக்களில் 336 தெருக்கள் குடிநீர் குழாய்கள் இல்லாமல் இருந்தன. இத்தெருக்களில் 290 தெருக்களில் 01.06.2007க்கு முன்பாக குழாய்கள் பதிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 46 தெருக்களில் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணி ஜுன் 2007ல் முடிவடையும்.

5) நகரிலுள்ள 16 குடிநீர் விநியோக மண்டல அமைப்புகளில் 11 குடிநீர் விநியோக மண்டல உட்கட்டமைப்புகளிலும், 12 நீர் விநியோக நிலையங்களிலும் ஏற்கெனவே மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள 4 நீர் விநியோக நிலையங்களுக்கும் (அண்ணா பூங்கா, கீழ்ப்பாக்கம், தெற்கு நீரேற்று நிலையம் மற்றும் கே.கே. நகர்) மற்றும் 5 குடிநீர் விநியோக மண்டல குழாய் உட்கட்டமைப்புகளுக்கும் (அண்ணா பூங்கா, கீழ்ப்பாக்கம், திருவல்லிக்கேணி தெற்கு நீரேற்று நிலையம் மற்றும் கே.கே. நகர்) மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு, ஜவகர்லால் நேரு தேசிய நகரக புனரமைப்பு திட்டத்தின்கீழ் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இதில், குழாய்களில் ஏற்படும் நீர்க்கசிவை கண்டறிதல், 30,000 குடிநீர் இணைப்புகளை சரிசெய்யும் பணிகள், செங்குன்றத்திலிருந்து கீழ்ப்பாக்கத்திற்கு நீர் எடுத்து செல்லும் மூடுகால்வாய்களுக்கு புனரமைப்பு பணி மேற்கொள்ளுதல் மற்றும் விநியோக அமைப்பில் வால்வுகள் அமைத்தல் ஆகிய பணிகள் அடங்கும். இத்திட்டம் ரூ.337.48 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, இதற்கான

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பந்தம் வழங்குவதற்காக ஆய்வில் உள்ளது. இத்திட்டப்பணிகள் 2 ஆண்டுகளுக்குள் முடிக்கக்ப்படும். இந்த திட்டத்தின்மூலம், நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் சமமான அளவில் குடிநீர் வழங்கஇயலும்.

6) குடிநீர் விநியோக அமைப்புகளில் விநியோகிக்கப்படும் குடிநீரின் தரத்தை ஒரு செயற் பொறியாளர் அவர்களின் தலைமையின்கீழ், நீர் பகுப்பாய்வாளர் / வேதியியலர் ஆகியோரடங்கிய நீரின் தரத்தை உறுதி செய்யும் பிரிவு தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. நல்ல முறையில் நிறுவப்பபட்டுள்ள பரிசோதனை நிலையம் ஒன்றும் கீழ்ப்பாக்கத்தில் இயங்கி வருகின்றது. ஒவ்வொரு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில், இந்திய தரக்காட்டுப்பாடு நிலையத்தினால் வரையறுக்கப்பட்ட தரத்தின் அளவிற்கு நிகராக நீர் சுத்திகரிக்கப்படுவதற்குத் தேவையான தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்ட நடைமுறை கட்டுப்பாட்டு பரிசோதனை நிலையம் ஒன்று தனியாக நிறுவப்பபட்டுள்ளது. குறிப்பிட்ட இடைவெளிகளில் குடிநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, நீர் விநியோக நிலையங்களுக்கு அனுப்புவதற்கு முன்னர், சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரம் கண்காணிக்கப்பட்டு, தேவையான தரத்தை உறுதி செய்தபின்னர், நச்சுக்கொல்லி (குளோரின்) செலுத்தி, நகரின் குடிநீர் வழங்கும் உட்கட்டமைப்பின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகின்றது. மேலும், தினமும் பல்வேறு நுகர்வோர் இடங்களிலிருந்து குறைந்தபட்சம் 100 நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, சென்னைக்குடிநீர் வாரிய தர உறுதி நிலையத்தின்மூலம் பரிசோதிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும், குறைந்தபட்சம் 2500 நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு, வழங்கப்படும் குடிநீரின் தரம் உறுதி செய்யப்படுகின்றது. தரத்தை தொடர்ந்து பராமரிப்பதற்கு, தேவைப்பட்டால், சரியான வழிமுறைகள் அந்தந்த பகுதிப் பொறியாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

7) 01.06.2007 அன்று பூண்டி, சோழவரம் மற்றும் புழல் ஏரிகளில் 3,325 மில்லியன் கனஅடி நீர் இருப்பும், வீராணம் ஏரியில் 425 மில்லியன் கடிஅடி நீர் இருப்பும், செம்பரம்பாக்கம் ஏரியில் 1091 மில்லியன் கடிஅடி நீர் இருப்பும் உள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து ஏப்ரல் 2007லிருந்து சோதனை முறையில் நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் நீர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது, நிலத்தடி நீர் ஆதாரங்களிலிருந்து நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கப்பட்டு வருகின்றது. தேவைப்பட்டால், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் அளவாக உயர்த்தி எடுக்கப்படும். வருங்காலத் தேவைக்கு நிலத்தடி நீரை பாதுகாப்பதற்காக, நிலத்தடி நீர் எடுத்தல் குறைக்கப்பட்டுள்ளது. ஏரிகளிலுள்ள நீர் இருப்பைக்கொண்டும் மற்றும் ஜூலை / ஆகஸ்ட் 2007ல் ஆந்திரப்பிரதேசத்திலிருந்து தெலுங்கு கங்கை திட்டத்திலிருந்து கிடைக்கக்கூடிய கிருஷ்ணா நீரைக்கொண்டும் அக்டோபர் 2007 மத்தியில் அடுத்த பருவமழை தொடங்குவது வரையிலும், நகருக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் அளவான நாளொன்றுக்கு 640 முதல் 645 மில்லியன் லிட்டர் நீர் தொடர்ந்து வழங்கப்படும்.

8) எண் 1 நீரேற்று நிலைய சாலை, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002ல் அமைந்துள்ள சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் மத்திய புகார்ப் பிரிவில், பொதுமக்கள் 2454040 / 28454030 அகிய தொலைபேசிகள் மூலம் தொடர்பு கொண்டு புகார்களைத் தெரிவிக்கலாம். மேலும், பொதுமக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசிகள் மூலம் அந்தந்த பகுதி அலுவலகங்களையும் தொடர்பு கொள்ளலாம்.

| வ. எண் | பகுதி | அலுவலக தொலைபேசி எண் | (Mobile phone) |
|---|---|---|---|
| 1 | I | 25984649 | 98843 84901 |
| 2 | II | 25902651 | 98843 84902 |
| 3 | III | 25517457 | 98843 84903 |
| 4 | IV | 26444623 | 98843 84904 |
| 5 | V | 26211122 | 98843 84905 |
| 6 | அருகிலுள்ள நகரகப் பகுதி (முகப்பேர்) | 26562457 | 98843 84923 |
| 7 | VI | 24995642 | 98843 84906 |
| 8 | VII | 28361004 | 98843 84907 |
| 9 | VIII | 28153803 | 98843 84908 |
| 10 | IX | 23811932 | 98843 84909 |
| 11 | X- அ | 24919772 | 98843 84910 |
| 12 | X- ஆ | 24919772 | 98843 84912 |

## சென்னை நகரின் கழிவுநீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரித்து வெளியேற்றும் அமைப்பு

கழிவுநீரை சேகரித்தல், அனுப்புதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றுதல் ஆகியவற்றிற்காக சென்னை நகரிலுள்ள கழிவுநீரகற்றும் அமைப்பு 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மண்டலம் 1ல், சென்னை நகரின் வடகிழக்கு பகுதியிலுள்ள பழமையான பகுதிகள் அடங்கும். இதன் கிழக்கு பகுதி கடற்கரையும், வடக்குப் பகுதி நகர பகுதியும், மேற்கு பகுதி பக்கிங்ஹாம் கால்வாயும், தெற்கு பகுதி பைகிராப்ட்ஸ் சாலையும் எல்லைகளாக உள்ளது. தண்டையார்பேட்டை, வண்ணாரப்பேட்டை, இராயபுரம், ஜார்ஜ் டவுன் மற்றும் சிந்தாதரிப்பேட்டை ஆகியவைகள் இதிலுள்ள முக்கிய பகுதிகளாகும்.

இந்த மண்டலத்தில், சுயேச்சையாக இயங்கும் 14 கழிவுநீரகற்றும் நிலையங்கள் உள்ளன. இதைத் தவிர, துணை கழிவுநீரகற்றும் நிலையங்களும் உள்ளன. இந்தப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், இறுதியாக, கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்து சென்று சுத்திகரிக்கப்பட்டு, வெளியேற்றப்படுகின்றது.

மண்டலம் 2, சென்னை நகரிலுள்ள பெரிய கழிவுநீரகற்றும் மண்டலமாகும். இதில், நகரின் வடக்கு மற்றும் மத்தியப் பகுதிகள் அடங்கியுள்ளது. இதன் கிழக்கில் பக்கிங்ஹாம் கால்வாயும் மற்றும் மாநகராட்சி நிலப்பரப்பும் எல்லைகளாக உள்ளது. நுங்கம்பாக்கம், சேத்துப்பட்டு, கீழ்ப்பாக்கம், எழும்பூர், புரசைவாக்கம், அயனாவரம், பெரம்பூர், வியாசர்பாடி, செம்பியம் மற்றும் கொடுங்கையூர் ஆகிய பகுதிகள் இம்மண்டலத்தில் அடங்கும். இந்த மண்டலத்தில், சுயேச்சையாக இயங்கும் 25 கழிவுநீரகற்றும் நிலையங்கள் உள்ளன. இதைத் தவிர, துணை கழிவுநீரகற்றும் நிலையங்களும் உள்ளன. இந்தப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், இறுதியாக, கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்து சென்று சுத்திகரிக்கப்பட்டு, வெளியேற்றப்படுகின்றது.

மண்டலம் 3ல், நகரின் மேற்குப் பகுதியில், மண்டலம் 2ன் வட பகுதிக்கும், மண்டலம் 4ன் தென் பகுதிக்கும் இடையில் அமைந்துள்ளது. நகரின் முக்கிய பகுதிகளாகிய தியாகராய நகர், கோடம்பாக்கம், அரும்பாக்கம், அண்ணாநகர் மற்றும் அமைந்தகரை ஆகியவைகள் இம்மண்டலத்தில் அடங்கும். இதில், சுயேச்சையாக இயங்கும் 12 கழிவுநீரகற்றும் நிலையங்கள் உள்ளன. இதைத் தவிர, 11 துணை கழிவுநீரகற்றும் நிலையங்களும் உள்ளன. இந்தப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், இறுதியாக, கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்து சென்று சுத்திகரிக்கப்பட்டு, வெளியேற்றப்படுகின்றது.

மண்டலம் 4, நகரின் மிகச்சிறிய கழிவுநீரகற்றும் மண்டலமாகும். அசோக் நகர், சைதாப்பேட்டை, ஜாபன்கான்பேட்டை, கலைஞர் கருணாநிதி நகரின் ஒரு பகுதி மற்றும் நேசப்பாக்கம் ஆகியவைகள் இம்மண்டலத்தில் அடங்கும். இதில், சுயேச்சையாக இயங்கும் 10 கழிவுநீரகற்றும் நிலையங்கள் உள்ளன. இந்தப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், இறுதியாக, நெசப்பாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்து சென்று சுத்திகரிக்கப்பட்டு, வெளியேற்றப்படுகின்றது.

மண்டலம் 5, நகரின் தெற்கு பகுதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய கழிவுநீரகற்றும் மண்டலமாகும். அடையாறு ஆற்றின் மூலம் இது பிரிக்கப்பட்டுள்ளது. ஆற்றின் வட பகுதியிலுள்ள பழமையான பகுதிகளாகிய மயிலாப்பூர், ஐஸ்ஹவுஸ், சீத்தம்மாள் காலனி, அடையாறு, காந்தி நகர் மற்றும் கிண்டி ஆகியவைகள் இம்மண்டலத்தில் அடங்கும். இதைத் தவிர, ஆற்றின் தெற்கு பகுதியில், புதியதாக மேம்பாடு அடைந்து வரும் பகுதிகளாகிய வேளச்சேரி, இந்திரா நகர், பெசன்ட் நகர், தரமணி, ஈக்காட்டுதாங்கல், கிண்டி தொழிற்பேட்டை ஆகியவைகளும் இதில் அடங்கும். இதில், சுயேச்சையாக இயங்கும் 18 கழிவுநீரகற்றும் நிலையங்கள் உள்ளன. இதைத் தவிர, 15 துணை கழிவுநீரகற்றும் நிலையங்களும் உள்ளன. இந்தப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், இறுதியாக, பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்து சென்று சுத்திகரிக்கப்பட்டு, வெளியேற்றப்படுகின்றது.

சென்னை நகரிலுள்ள மொத்த கழிவுநீர்க் குழாய்களின் நீளம் 2650 கி.மீட்டராகும். மேலும், 180 கழிவுநீர் இறைக்கும் நிலையங்களின் மூலம் பெறப்படும் கழிவுநீர், நகரின் 4 இடங்களில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது. ஜுன் 2006 அன்றுள்ளபடி, நகரில் மொத்தமுள்ள 15,460 தெருக்களில், 177 தெருக்களுக்கு மட்டும் கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்பட வேண்டியிருந்தது. பின்னர், விடுபட்ட தெருக்களில், கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்பொழுது, மே 2007 அன்றுள்ளபடி, 80 தெருக்களில் கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிவடைந்து விட்டன. மேலும், 21 தெருக்களில் நடைபெற்று வரும் பணிகள் ஜுன் 2007ல் முடிவடையும். கொடுங்கையூர் பகுதியில் புதியதாகத் தோன்றியுள்ள தென்றல் நகரில், 76 தெருக்களுக்கு புதியதாக கழிவுநீர் சேகரிப்பு கட்டமைப்புகள், கழிவுநீர் கொண்டுசெல்லும் குழாய்கள் அமைப்பதற்கான பணிகள் ஆகியவைகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 4 மாதங்களுக்குள் முடிக்கப்பட உள்ளன.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கொள்திறனை அதிகரிப்பதற்காக ஏற்கெனவே இயங்கி வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் புனரமைப்புப் பணிகளும் மற்றும் கூடுதலாக சுத்திகரிப்பு வசதிகள் கொண்ட கட்டுமானப் பணிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கொள்திறன்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

<u>கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் விவரங்கள்</u>

| வ. எண் | சுத்திகரிப்பு நிலையங்கள் | புனரமைக்கப்பட்ட தற்போதைய நிலையங்களின் கொள்திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில்) | புதியதாக கட்டப்பட்ட நிலையங்களின் கொள்திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில்) | மொத்த கொள்திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | கொடுங்கையூர்<br>மண்டலம் 1 : 80<br>மண்டலம் 2 : 80 | 160 | 110 | 270 |
| 2 | கோயம்பேடு<br>மண்டலம் 3 | 34 | 60 | 94 |
| 3 | நெசப்பாக்கம்<br>மண்டலம் 4 | 23 | 40 | 63 |
| 4 | பெருங்குடி | –– | 54 | 54 |
| 5 | வில்லிவாக்கம் | 5 | –– | 5 |
| | **மொத்தம்** | **222** | **264** | **486** |

ஏறத்தாழ நாளொன்றுக்கு 25 மில்லியன் லிட்டர் இரண்டாவது நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், பெரிய தொழிற்சாலைகளான சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட், சென்னை உரத்தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கு மூன்றாவது நிலை சுத்திகரிப்பைத் தொடர்ந்து, சவ்வூடுபரவல் மூலம் சுத்திகரிப்பு செய்து அத்தொழிற்சாலைகளின் உபயோகங்களுக்கு பயன்பட்டு வருகின்றது. மற்றும், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், சென்னை நகரிலுள்ள ஒரு மின்நிலையத்திற்கு ஏறத்தாழ நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் வழங்கி மேலும் சுத்திகரிப்பு செய்து தொழிற்சாலையின் உபயோகங்களுக்காக பயன்பட்டு வருகின்றது.

## திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி சென்னை –
## பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்

சென்னை கிண்டியில் அமைந்துள்ள திரு.வி.க தொழிற்பேட்டையானது 1958ஆம் ஆண்டு பொதுப்பணித்துறையால் அமைக்கப்பட்ட மிகவும் பழைமையான தொழிற்பேட்டையில் ஒன்றாகும். பின்னர் இப்பேட்டை சிட்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த தொழிற்பேட்டையில் சுமார் 610 சிறுதொழில் நிறுவனங்களும் மற்றும் தொழிலாளர் குடியிருப்பும் அமைந்துள்ளன. இந்த தொழிற்பேட்டை சென்னை மாநகர 140வது கோட்டத்தில் அமைந்துள்ளது.

கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள அடிப்படை வசதி அனைத்தும் மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளன. இதனை புதுப்பித்து தொழிற்பேட்டைக்கு மாற்றியமைக்க தமிழ்நாடு சிறுத்தொழில் மேம்பாட்டுக் கழகம் ஒரு ஒருங்கிணைந்த கட்டுமான வளர்ச்சித்திட்டத்தை மத்திய அரசின் உதவியோடு செயல்படுத்த உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள கழிவு நீரகற்று கட்டமைப்பு வசதிகளை புதுப்பிக்கும் பணி சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திடம் வைப்பு பணியாக அளிக்கப்பட்டுள்ளது இதன்படி சென்னை குடிநீர் வாரியம் கிண்டி தொழிற்பேட்டை மற்றும் அதனை சார்ந்துள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு கழிவுநீரகற்று வசதி அமைத்துத் தர ரூ.735 இலட்சம் அளவில் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இதில் தொழிற்பேட்டைக்கு அருகிலுள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு மட்டும் கழிவுநீரகற்று வசதி அமைத்திட சுமார் ரூ.220 இலட்சம் ஆகும். கிண்டி தொழிற்பேட்டைக்கு கழிவு நீரகற்று வசதி அமைப்பு செய்திட ரூ.515 இலட்சம் ஆகும். இத்தொகையை சென்னைக்குடிநீர் வாரியமும் மற்றும் சிறுதொழில் மேம்பாட்டு கழகமும் சரிபாதியாக பங்கீடு செய்துகொள்ள ஒப்புதல் அளித்துள்ளன.

இப்பணி இரண்டு தொகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது முதல் தொகுப்பு ரூ.450 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கழிவுநீர் குழாய்கள் அமைக்கும் பணியைக் கொண்டது. இரண்டாம் தொகுப்பில் கழிவுநீரிறைக்கும் நிலையங்கள் மற்றும் கழிவுநீர் விசைக்குழாய்கள் அமைக்கும் பணிகள் அடங்கும். இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.245 இலட்சம் ஆகும்.

### தொகுப்பு–1

இதில் 200/250/300/400/450/500 மிமீ ஆகிய வெவ்வேறு விட்டமுள்ள கழிவுநீர் குழாய்கள் 20.50 கிமீ நீளத்திற்கு அமைக்கப்பட உள்ளது மற்றும் 714 எண்ணிக்கை ஆள் நுழைவு வாயில்கள் அமைக்கும் பணிகளும் இதில் அடங்கும். மேற்சொன்ன 20.50 கிமீ நீளத்தில், 14.32 கிமீ நீளம் குழாய்கள் கிண்டி தொழிற்பேட்டை பகுதியிலும் மீதமுள்ள 6.18 கிமீ குழாய்கள் அருகேயுள்ள

குடியிருப்பு பகுதிகளான ரெட்டி முதல் மற்றும் இரண்டாவது தெரு, நாகி ரெட்டி தோட்டம் அருளாயம்மன் பேட்டை முதல் மற்றும் இரண்டாவது தெரு மற்றும் ஆலாச்சியம்மன் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட உள்ளது. இப்பணிகள் 14.12.2006 அன்று தொடங்கப்பட்டன. இது வரையில் 9.8கிமீ நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் மற்றும் 415 ஆள் நுழைவு வாயில்கள் அமைக்கும் பணிகளும் முடிவடைந்துள்ளன. அனைத்து பணிகளும் வரும் ஆகஸ்ட் மாதம் 2007 ஆம் ஆண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**தொகுப்பு–2**

இத்தொகுப்பில் ஒரு பிரதான கழிவுநீரிறைக்கும் நிலையம், ஒரு உந்து கழிவுநீரிறைக்கும் நிலையம் மற்றும் 2.115 கிமீ நீளத்திற்கு 250/450 மிமீ விட்டமுள்ள விசைக்குழாய்கள் அமைக்கும் பணி ஆகியவன அடங்கும். இப்பணிகள் 08.02.2007 அன்று தொடங்கப்பட்டன. இது வரையில் 40 விழுக்காடுகள் பணிகள் முடிவடைந்துள்ளன. அனைத்து பணிகளும் வரும் ஆகஸ்ட் மாதம் 2007 ஆம் ஆண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# <u>கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்</u>

கழிவுநீர் சேகரித்தல், கொண்டு செல்லுதல் மற்றும் சுத்திகரிப்பு சம்பந்தமாக சென்னை மாநகரம் ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் தென் சென்னை பகுதிகளில் உருவாகும் கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக நாளொன்றுக்கு 94 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு சுத்திகரிப்பு நிலையங்கள் கோயம்பேட்டில் உள்ளன. நாளொன்றுக்கு 34 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவு நீரேற்று நிலையம் 1978 ஆம் ஆண்டு மற்றும் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவு நீரேற்று நிலையம் 2005 ஆம் ஆண்டு இந்திய அரசின் சுற்றுசூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் நிதியுதவியினால் செயல்பட்டு வருகிறது. இவ்விரு சுத்திகரிப்பு நிலையங்களும் செரிவூட்டப்பட்ட சகதி தொழில்நுட்ப முறையில் செயல்படுகின்றன.

இந்த பகுதியில் உள்ள 24 கழிவு நீரேற்று நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத கழிவு நீரை உயர்த்தப்பட்ட கால்வாய் வழியாக இரண்டு சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் அனுப்பப்படுகிறது. தற்பொழுது நாளொன்றுக்கு 94 மில்லியன் லிட்டர் கழிவுநீர் மேற்கண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்படுகிறது. புவிஈர்ப்பு குழாய்கள் வழியாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் கூவம் நதிநீர் வழியில் வெளியேற்றப்படுகிறது.

நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை முழுமையாக இயக்குவதற்கு தேவையான மின்சாரம் இக்கழிவுநீ'ரை சுத்திகரிக்கும் போது உருவாகும் சகதியிலிருந்து பெறப்படும் மீதேன் (Methane) வாயு மூலம் மின்சாரம் பெறப்படுவது, இந்த கழிவுநீர் நிலையத்தின் தனித்தன்மையாகும். நாளொன்றுக்கு சராசரியாக 7500 கன மீட்டர் உயிர் வாயு (Bio gas) உற்பத்தியாகிறது. இந்த அளவு 7500 மின் அலகுகள் உள்ள மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த அளவு மொத்த சுத்திகரிப்பு நிலையத்தையும் இயக்குவதற்கு போதுமானது. உயிர் வாயு மூலமாக தயாரிக்கப்படும் மின்சாரத்தினால் மின்சார வாரியத்திற்கான ஒரு மாதத்திற்கு ரூ. 7.80 இலட்சங்கள் சேமிக்கப்படுகிறது. மீதேன் வாயுவிலிருந்து 60 சதவிகிதம் உயிர் வாயு உபயோகப்படுத்துவது தேசிய சேமிப்பு மற்றும் மின்சார சேமிப்பு ஆகும்.

# <u>கலைஞர் கருணாநிதி நகரில் பகுதி 130ல் நடைபெறும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் பணிகள்</u>

1. <u>ராணி அண்ணாநகரில் அமைந்துள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகள் பற்றிய விவரம்:</u>

மொத்த மக்கள் தொகை – 7000

குடியிருப்புகளின் எண்ணிக்கை – 1532

பிளாக்குகளின் எண்ணிக்கை – 39

கைப்பம்புகளின் எண்ணிக்கை – 62

இந்தியா மார்க்–2 பம்புகளின் எண்ணிக்கை – 8

2. <u>குடிநீர் வழங்கல் அமைப்பின் மேம்பாட்டுப் பணிகள்:</u>

மதிப்பீட்டுத் தொகை – ரூ.1,64,000/–

பதிக்கப்படவேண்டிய குடிநீர்க் குழாய்களின் மொத்த நீளம் 100 மி.மீ. விட்டமுள்ள நெகிழ் இரும்புக் குழாய்கள் – 90 மீட்டர்

இதுவரை பதிக்கப்பட்ட குழாய்களின் நீளம் – 100 மி.மீ. விட்டமுள்ள நெகிழ் இரும்புக் குழாய்கள் – 85 மீட்டர்

மீதமுள்ள பணிகள் 10.06.2007க்குள் முடிக்கப்படும்.

3. <u>கழிவுநீர் அகற்று வசதி அமைப்பின் மேம்பாட்டுப் பணிகள்:</u>

மதிப்பீட்டுத் தொகை – ரூ.9,97,000/–

பதிக்கப்படவேண்டிய <u>கழிவுநீர்க்</u> குழாய்களின் மொத்த நீளம் –
150 மி.மீ. விட்டமுள்ள சுட்டக் களிமண் குழாய்கள் – 270 மீட்டர்
250 மி.மீ. விட்டமுள்ள சுட்டக் களிமண் குழாய்கள் – 785 மீட்டர்

இதுவரை பதிக்கப்பட்ட குழாய்களின் நீளம் –
150 மி.மீ. விட்டமுள்ள சுட்டக் களிமண் குழாய்கள் – 20 மீட்டர்
250 மி.மீ. விட்டமுள்ள சுட்டக் களிமண் குழாய்கள் – 730 மீட்டர்

அனைத்துப் பணிகளும் 15.06.2007–க்குள் முடிக்கப்படும்.

# மைலாப்பூர் மற்றும் நந்தனம் குடிநீர் வழங்கு நிலையங்கள்

மைலாப்பூர் மற்றும் நந்தனம் குடிநீர் வழங்கு நிலையங்கள் எம்.ஆர்.சி.நகரில் அமைந்துள்ளன. சென்னை நகரில் இயங்கும் 16 குடிநீர் வழங்கு நிலையங்களுள் இந்த இரு நிலையங்களும் அடங்கும். இக்குடிநீர் வழங்கு நிலையங்களில் தனி கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், உந்து இயந்திரங்களும், குளோரின் செலுத்தும் நிலையங்களும் உள்ளன.

பயன்பெறும் கோட்டங்கள்:

| | | |
|---|---|---|
| பகுதி–6 | : | 91, 92, 93, 94, 95, 96 |
| பகுதி–8 | : | 116 |
| பகுதி–10அ | : | 142 முதல் 150 வரை |

பயனடையும் மக்கள் தொகை:

(1) மைலாப்பூர் பகுதியில் பயனடையும் மக்கள் தொகை – 2,33,650
(2) வழங்கப்பட்டு வரும் குடிநீர் அளவு – 107லிட்டர்/நாள் ஒன்றுக்கு/நபர் ஒன்றுக்கு
(3) நந்தனம் பகுதியில் பயனடையும் மக்கள் தொகை 80,950
(4) வழங்கப்பட்டு வரும் குடிநீர் அளவு – 105 லிட்டர்/நாள் ஒன்றுக்கு/நபர் ஒன்றுக்கு

நடமாடும் ஊர்தி மூலம் குடிநீர் வழங்கல்

குடிசைப்பகுதி மக்களுக்கு இக்குடிநீர் வழங்கு நிலையங்களிலிருந்து லாரிகள் மூலம் 20 நடைகள் குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. மேலும் பணம் செலுத்தி குடிநீர் பெறும் நுகர்வோருக்கு 40 நடைகள் குடிநீர் இங்கிருந்து வழங்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | மைலாப்பூர் | நந்தனம் |
|---|---|---|---|
| 1. | கீழ்நிலைத் தொட்டியின் கொள்ளளவு | 24.576 மில்லியன் லிட்டர் | 11.52 மில்லியன் லிட்டர் |
| 2. | உந்து விவரம் | 6 பம்புகள் – 300 குதிரைத் திறன் உந்து மோட்டர் – 520 லிட்டர்/நிமிடத்திற்கு குடிநீர் வெளியேற்றப்படுகிறது – 30 மீட்டர் உயரம் | 3 பம்புகள் – 300 குதிரைத் திறன் உந்து மோட்டர் – 520 லிட்டர்/நிமிடத்திற்கு குடிநீர் வெளியேற்றப்படுகிறது – 30 மீட்டர் உயரம் |
| 3. | வழங்கும் குடிநீர் அளவு | 25 மில்லியன் லிட்டர் | 8.5 மில்லியன் லிட்டர் |
| 4. | பயன்படும் மக்கள் தொகை | 233650 | 80950 |
| 5. | ஒரு நபர் குடிநீர் அளவு/ஒரு நாளைக்கு | 107 லிட்டர் | 105 லிட்டர் |

## பகுதி–10B பணிமனை 153 மற்றும் 153 A இல் உள்ள குடிநீர் வினியோக குழாய்கள் இல்லாத தெருக்களில் குழாய் பதிக்கும் பணி பற்றிய அறிக்கை 01. 6.2007 நிலவரப்படி

கிழக்கு வேளச்சேரியில் உள்ள பணிமனை 153ல், 311 தெருக்களும், மேற்கு வேளச்சேரியில் உள்ள பணிமனை 153– A ல், 757 தெருக்களும் உள்ளன. கிழக்கு மற்றும் மேற்கு வேளச்சேரியில் மொத்தம் 1068 தெருக்கள் உள்ளன. இவற்றில் 849 தெருக்களில் ஏற்கனவே குடிநீர் குழாய்கள் இருக்கின்றன. மீதமுள்ள 219 தெருக்களில் மொத்தம் 26.562 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோக குழாய் பதிக்கும் பணிக்காக ரூ.356.682 லட்சம் மதிப்பீட்டில் ஜூன் 2006ல் ஒப்புதல் பெறப்பட்டது.

பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 210 தெருக்களில் 25.142 கி.மீ. நீளத்திற்கு குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கப்பட்டு அப்பகுதிகளில் வீட்டு குடிநீர் இணைப்புக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு குடிநீர் இணைப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றது. மீதமுள்ள 9 தெருக்களுக்கு (இதில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புப் பகுதியிலுள்ள 4 தெருக்கள் அடங்கும்) 1.42 கி.மீ நீளத்திற்கு குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் 10.6.2007–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப்பணியினால் வேளச்சேரியிலுள்ள 50,000 மக்கள் பயனடைவார்கள்.

# தரஉறுதி செய்தல்

குடிநீர் விநியோக அமைப்புகளில் விநியோகிக்கப்படும் குடிநீரின் தரத்தை ஒரு செயற் பொறியாளர் அவர்களின் தலைமையின்கீழ், நீர் பகுப்பாய்வாளர் / வேதியியலர் ஆகியோரடங்கிய நீரின் தரத்தை உறுதி செய்யும் பிரிவு தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. நல்ல முறையில் நிறுவப்பபட்டுள்ள பரிசோதனை நிலையம் ஒன்றும் கீழ்ப்பாக்கத்தில் இயங்கி வருகின்றது. ஒவ்வொரு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில், இந்திய தரக்காட்டுப்பாடு நிலையத்தினால் வரையறுக்கப்பட்ட தரத்தின் அளவிற்கு நிகராக நீர் சுத்திகரிக்கப்படுவதற்குத் தேவையான தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்ட நடைமுறை கட்டுப்பாட்டு பரிசோதனை நிலையம் ஒன்று தனியாக நிறுவப்பபட்டுள்ளது. குறிப்பிட்ட இடைவெளிகளில் குடிநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, நீர் விநியோக நிலையங்களுக்கு அனுப்புவதற்கு முன்னர், சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரம் கண்காணிக்கப்பட்டு, தேவையான தரத்தை உறுதி செய்தபின்னர், நச்சுக்கொல்லி (குளோரின்) செலுத்தி, நகரின் குடிநீர் வழங்கும் உட்கட்டமைப்பின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகின்றது. மேலும், தினமும் பல்வேறு நுகர்வோர் இடங்களிலிருந்து குறைந்தபட்சம் 100 நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, சென்னைக்குடிநீர் வாரிய தர உறுதி நிலையத்தின்மூலம் பரிசோதிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும், குறைந்தபட்சம் 2500 நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு, வழங்கப்படும் குடிநீரின் தரம் உறுதி செய்யப்படுகின்றது. தரத்தை தொடர்ந்து பராமரிப்பதற்கு, தேவைப்பட்டால், சரியான வழிமுறைகள் அந்தந்த பகுதிப் பொறியாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் 2 நடமாடும் பரிசோனைக்கூடங்கள் குடிநீரின் தரத்தை அறியும் கருவிகளுடன் சென்னை நகரின் பல்வேறு இடங்களுக்கு சென்று ஆய்வு நடத்தப்படுகிறது. குடிநீரின் தரத்தைப்பற்றி புகார்கள் வந்தால் மேற்கண்ட நடமாடும் பரிசோதனைக்கூடங்களில் வேதியியலர் மற்றும் உதவியாளர்கள் சென்று ஆய்வு நடத்தி மாசு நீர் கலப்பின் காரணத்தை கண்டறிந்து நிவர்த்திசெய்ய ஆவன செய்யப்படுகிறது.

மாசுநீர் கலப்பு நிவர்த்திசெய்த பிறகு மீண்டும் குடிநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு தரம் உறுதி செய்யப்படுகிறது.

சென்னை நகரின் நகர எல்லைக்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து கிணற்று நீர் மற்றும் ஆழ்துளை கிணற்று நீர் மாதிரிகள் பெறப்பட்டு தரம் பரிசோதிக்கப்படுகிறது. அதற்காக ரூ.75/– மட்டும் கட்டணமாக பெறப்படுகிறது.

இதைப்பற்றிய அதிகப்படியான தகவல்கள் பெறவேண்டுமென்றால் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

| | |
|---|---|
| தொலைபேசி எண் | **2660 4059** |
| Mobile phone | **98843 85259** |

# தகவல் தொழில் நுட்பத் துறை அமல்படுத்துதல்

சென்னைக் குடிநீர் வாரியம் தகவல் தொழில்நுட்பத் துறையில் 'ஆரக்கல்' முறையை பயன்படுத்தி கணினியின் மூலம் பட்டியல் தயாரித்தல் மற்றும் கட்டணம் வசூலித்தல், பண்டகசாலை கணக்குகள் பராமரித்தல் போன்ற வேலைகளை செவ்வனே செய்து வருகிறது.

தற்சமயம் 10 பகுதி அலுவலகங்கள், ஒட்டிய நகர பகுதிகள், தரக்கட்டுப்பாட்டு பிரிவு, பயிற்சி மையம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பண்டகசாலை மற்றும் 60 பணிமனைகளிலும் உரிய மென்பொருட்களோடு கணினிகள் நிறுவப்பட்டு அவைகள் வாரியத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள மையக் கணினியுடன் இணைக்கப்பட்டு மார்ச் 2007 முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

இதனால், நுகர்வோர் எப்பகுதியில் அவர்களின் சொத்து இருந்தாலும் தங்களின் நிலுவைகளை வாரியத்தின் அனைத்து 70 கட்டணம் வசூலிக்கும் இடங்களிலும் (அதாவது 60 பணிமனைகளிலும் மற்றும் 10 பகுதி அலுவலகங்களிலும்) கட்டணம் செலுத்தலாம். எல்லாவித நிதித்துறை பிரிவு அலுவலகங்களிலுள்ள நிதி பற்றிய கணக்கு வைப்பு முறைகளும், பண பட்டுவாடா நடைமுறைகளும் உரிய மென்பொருட்களோடு கணினிகள் மூலம் இணைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இணையதளம் மூலம் பெறப்படும் புகார்கள் தலைமை அலுவலகத்தில் கண்காணிக்கப்படுவது போல , ஜுன் 2007 முதல் எல்லா பகுதி அலுவலகங்களிலும் மற்றும் பிரிவு அலுவலகங்களிலும் அமலுக்கு கொண்டுவரப்பட இருக்கிறது.

## தகவல் தொழில்நுட்பத் துறை அமல்படுத்துதல் ஏற்படும் பயன்கள்

தகவல் தொழில்நுட்பத் துறை அமல்படுத்துவதால் கீழ்கண்ட பயன்கள் ஏற்பட்டுள்ளன.

- நுகர்வோர் தங்களின் வரி நிலுவைகளை அனைத்து பகுதி மற்றும் பணிமனைகளிலும் செலுத்தலாம்.
- வரி வசூல் உடனே வரவு வைக்கப்படுகிறது.
- நிலுவைத் தொகைகளை நுகர்வோர் இணையதளம் வழியாக அறியலாம்.

- பகுதி அலுவலகங்களில் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கு வழக்குகளை பிரிவு அலுவலகங்களில் உடனே பார்க்கலாம்.
- நுகர்வோரின் வரி வசூல் பற்றிய குறைகளை அலுவலர்கள் உடனே தீர்த்து வைக்கலாம்.
- எம்ஐஎஸ் அறிக்கையை அலுவலர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.
- சம்பள அட்டை விவரங்களை அலுவலர்கள் கணினி மூலம் பார்க்கலாம்.
- அலுவலர்களின் பொது வைப்புநிதி விவரங்களை கணினி மூலம் அறிந்து கடன் கொடுக்கலாம்.
- கொள்முதல் ஆணை விவரங்களை கணினி மூலம் பொருட்களின் விவரங்களை அறிந்து பணப்பட்டுவாடா செய்யலாம்.
- பண்டகசாலையிலுள்ள பொருட்களின் இருப்பு விவரங்களை அந்தந்த செயல்படுத்தும் துறைகள் தெரிந்து கொள்ளலாம்.
- அலுவலர்கள் பட்டி ஏற்பு விவரங்களை தெரிந்து கொள்ளலாம்.
- எல்லாவித நிதி மற்றும் விலை விவரங்களை இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம்.
- முக்கியமான முடிவு எடுப்பதற்கு தேவையான உடனடி அறிக்கைகளை எடுக்கலாம்.

# பணியாளர் நலன்

சென்னை குடிநீர் வாரியம் பணியாளர்களின் நலனை முக்கிய நோக்கமாக கருதி அவர்கள் பணி புரிய ஏதுவாக பணி சூழ்நிலைகளை உருவாக்கி கொடுத்துள்ளது. மேலும் பணியாளர்களை வாரியத்தின் முக்கிய சொத்தாக கருதி அவர்களின் நலன்களுக்கு முன்னுரிமையுடன் நலன்களை வழங்கி வருகிறது. அரசு பணியாளர்கள் இணையாக மருத்துவ வசதிகள் அனைத்தும் வழங்கியபோதிலும் கீழ்க்கண்ட மருத்துவ சலுகைகள் அளிக்கப்பட்டுவருகிறது.

1. தனியார் மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சை செய்துகொள்ள ரூ.1,00,000 வரை வழங்கும் சிறப்பு மருத்துவ சிகிச்சை திட்டம்
2. மருத்துவ செலவீனம் ஈடுசெய்தல்
3. மருத்துவமனை செலவீனங்களை வழங்குதல்

மேலும் மருந்தாளுனர் உதவியுடன் ஒரு மருத்துவர் தலைமை அலுவலகத்தில் மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார். மருத்துவர் பகுதி அலுவலகங்களுக்கும் சென்று ஆங்காங்கே பணிபுரியும் பணியாளர்களுக்கு மருத்துவ ஆலோசனை வழங்கி மருந்துகள் வழங்குகிறார்.

வாரிய பணியாளர்களுக்கும் மற்றும் அவர்கள் குடும்பத்தினரும் பயன் பெறும் வகையில் முழு மருத்துவ பரிசோதனைகள், (ஈசிஜி, ஓ–சுயல, இரத்தம், சீறுநீர்) சென்னை மாநகராட்சி பரிசோதனைகூடத்தில் ஆய்வு நடத்தி சிறப்பு மருத்துவ முகாம்கள் அந்தந்த பகுதி அலுவலகங்களில் சிறப்பு மருத்துவர்களான பொது மருத்துவம், தோல் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம் மற்றும் கண் பரிசோதனை ஆகியவற்றிற்க்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கி மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 1600 தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்கள் பயன்பெற்றுள்ளனர்.